# முதல் இடைப் பருவத் தேர்வு – 2024

## ஆறாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி | கணிதம் | மதிப்பெண்கள்:50

### பகுதி – அ

**I சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 5x1=5

1. 1 பில்லியனுக்குச் சமமானது
   அ) 100 கோடி ஆ) 100 மில்லியன் இ) 100 இலட்சம் ஈ) 10,000 இலட்சம்
2. 76812 இன் அருகிலுள்ள நூறுகளின் உத்தேச மதிப்பு
   அ) 77000 ஆ) 76000 இ) 76800 ஈ) 76900
3. முன்னி இல்லாத ஒரு முழு எண்
   அ) 10 ஆ) 0 இ) 1 ஈ) இவற்றுள் ஏதுமில்லை
4. 'y+7=13' எனில் 'y' இன் மதிப்பு
   அ) y=5 ஆ) y=6 இ) y=7 ஈ) y=8
5. 1 லி இக்கும் 50 மிலி இக்கும் உள்ள விகிதம் ________
   அ) 1 : 5 ஆ) 1 : 20 இ) 20 : 1 ஈ) 5 : 1

**II கோடிட்ட இடத்தை நிரப்புக:** 5x1=5

6. மிகச் சிறிய ஏழிலக்க எண் ________
7. 658794 ________ 658794
8. ________ ஆல் வகுப்பது என்பது வரையறுக்கப்படவில்லை.
9. 'P-5' ஆனது 12 எனில் 'P' இன் மதிப்பு ________
10. ரூ.3க்கும் ரூ.5 இக்கு உள்ள விகிதம் ________

**III சரியா, தவறா எனக் கூறுக:** 5x1=5

11. ஓரிலக்க எண்ணின் தொடரி எப்போதும் ஓரிலக்க எண்ணாகும்.
12. நான்கு இலக்க எண்களின் மொத்த எண்ணிக்கை 9000.
13. முழு எண்களின் பெருக்கல் சமனி பூச்சியம் ஆகும்.
14. q மற்றும் 20 இன் பெருக்கற்பலன் 20q.
15. விகிதத்தின் ஏதேனும் ஓர் உறுப்பின் மதிப்பு 1 ஆக இருக்காது.

**IV பொருத்துக:** 5x1=5

| | | |
|---|---|---|
| 16. 999 + 1 = _____ | = | 2p |
| 17. 48792☐48972 | = | 1000 |
| 18. 167 ல் 1 ன் இடமதிப்பு | = | < |
| 19. 'P' ன் இருமடங்கு | = | 3 : 4 |
| 20. 15 : 20 ன் எளிய வடிவம் | = | நூறு |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – ஆ

**V ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி: 5x2=10**

21. பின்வரும் எண்ணுருக்களின் எண் பெயர்களை பன்னாட்டு முறையில் எழுதுக.
    i) 345,678 ii) 8,343,710
22. கொடுக்கப்பட்ட எண் முறைகளை முழுமைப்படுத்துக.
    பத்துக்கோடி, கோடி, பத்து இலட்சம், இலட்சம், ______, ______, ______, ______, ______
23. 1386787215, 137698890, 86720560 என்ற எண்களில் எந்த எண் மிகப் பெரியது ? எந்த எண் மிகச் சிறியது ?
24. பின்வரும் எண்களைக் கொடுக்கப்பட்ட இட மதிப்பிற்கு முழுமைப்படுத்துக.
    i) 4,065 ; நூறு ii) 44,555 ; ஆயிரம்
25. சுருக்குக : (10+17) ÷ 3
26. பின்வரும் இயற்கணிதக் கூற்றுகளை வாய்மொழிக் கூற்றுகளாக மாற்றுக.
    i) x ÷ 3 ii) 70S
27. 20 : 5 என்ற விகிதத்தை எளிய வடிவில் காண்க.

## பகுதி – இ

**VI ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி: 4x5=20**

28. மிகப்பெரிய ஆறிலக்க எண்ணை எழுதி, அதை இந்திய மற்றும் பன்னாட்டு முறைகளில் காற்புள்ளி இடுக.
29. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை இறங்கு வரிசையில் எழுதுக.
    128435, 10835, 21354, 6348, 25840
30. ஓர் ஆண்டில், மொத்த காகித விற்பனை நிறுவனம் 7,50,000 குறிப்பேடுகளில் 6,25,600 குறிப்பேடுகளை விற்பனை செய்துள்ளது. விற்பனை ஆகாத குறிப்பேடுகளின் எண்ணிக்கையைக் காண்க.
31. அறிவழகன் அவரது தந்தையை விட 30 வயது இளையவன். அறிவழகனின் வயதை அவரது தந்தையின் வயதைக் கொண்டு எழுதவும்.
32. அகிலன் 1 மணி நேரத்தில் 10 கி.மீ நடக்கிறான். செல்வி 1 மணி நேரத்தில் 6 கி.மீ நடக்கிறாள். எனில், அகிலன் மற்றும் செல்வி நடந்த தொலைவுகளுக்கு இடையே உள்ள விகிதத்தை எளிய வடிவில் காண்க.
33. காற்புள்ளியைப் பயன்படுத்திப் பின்வரும் எண்களைப் பன்னாட்டு முறையில் எழுதுக.
    i) 347056 ii) 7345671 iii) 634567105 iv) 1234567890

***/***

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com